**Judicial Form No.53.**

**{See Rule 42}**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Cr.P.C)

-----

IN THE COURT OF THE ADDITIONAL SESSIONS JUDGE, VIRUDHUNAGAR

| | | |
|---|---|---|
| Calendar .. .. | ) | |
| Miscellaneous .. .. | ) | |
| | ) | **Sessions Case No. 52/2023** |
| Preliminary Register .. .. | ) | |
| Sessions .. .. | ) | |

| | | |
|---|---|---|
| | { | **Prosecution PW1** |
| Deposition of witness for PW. | { | Defence |
| | { | Court |

| | | |
|---|---|---|
| Name | : | கார்த்திகேயன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(எதிரிகள் ஆஜர் இல்லை 317 கு.வி.மு.ச மனு அனுமதிக்கப்பட்டது)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 {Central Act 44 of 1969} on the **18th day of November 2025.**

முதல் விசாரணை **:** நான் சாத்தூர் நென்மேனியில் குடியிருந்து வருகிறேன். வழக்கு சம்பவத்தில் புகார்தாரர் வேலம்மாள் எனது தாயார். தற்சமயம் அவர் இறந்துவிட்டார். அவர் நென்மேனி ஊராட்சி மன்ற தலைவியாக இருந்து

வந்தார். எதிரி பெரியசாமியை எனக்கு தெரியும். அவர் எனது ஊர்காரர். கடந்த 22.08.2022 ம் தேதி நான் சொந்தவேலையாக மதுரையில் இருந்தேன். அன்று இரவு நான் வீட்டிற்கு வரவில்லை. மறுநாள்தான் வீட்டிற்கு வந்தேன். இரவு சுமார் 8 மணிக்கு எனது அம்மா எனக்கு போன் செய்து வீட்டிற்கு முன்னால் நின்று யாரோ சண்டைபோடுகிறார் என்று சொன்னார். மறுநாள் காலையில் நான் வீட்டிற்கு வந்து என் அம்மாவிடம் கேட்டபோது யாரோ வீட்டிற்கு வந்து போட்டதாக சொன்னார், நான் என்ன என்று பாருங்கள் என்று சொன்னேன். வழக்கு சம்பவத்தில் என்னுடைய வீட்டிற்கு என்ன சேதம் ஏற்பட்டிருந்தது என்றும், பொதுசொத்திற்கு என்ன சேதம் ஏற்பட்டிருந்தது என்றும், வழக்கு சம்பவத்தில் யாருக்கு காயம் ஏற்பட்டது என்று உங்களது அம்மா சொன்னாரா என்றால் - சொல்லவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் எனது தாயார் வேலம்மாளின் கையொப்பம்தான். அறிவேன் சாட்சியாக உள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் மேற்படி புகார்மனுவில் என்ன விவரம் எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. புகார்மனுவில் உள்ள வேலம்மாளின் கையொப்பம் அ.த.சா.ஆ-1. அறிவேன் சாட்சியாக உள்ள எனது கையொப்பம் அ.த.சா.ஆ-2. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டதன் பேரில் அதற்கு அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**)**

அரசு தரப்பு குறுக்குவிசாரணை

கடந்த 22.08.2022 ம் தேதி எனது தாயார் எனக்கு போன் செய்து பெரியசாமி என்பவர் உங்கள் வீட்டிற்கு முன்னுள்ள காம்பவுண்ட் கேட்டை கல்லால் உடைத்தார் என்றும், அதனை சத்தம்போட்ட எனது தாயாரை அசிங்கமாக பேசினார் என்றும், எனது தாயார் ஆம்பள இல்லாத வீட்டில் வந்து ஏன் பிரச்சினை செய்கிறார் என்று கேட்டதாகவும், அதற்கு எதிரி பெரியசாமி உன் மகன் வந்து என்னை புடுங்கிடுவானா என்று சொல்லி எனது தாயாரை தலைமுடியை பிடித்து கீழே தள்ளிவிட்டார் என்றும்,

அப்போது பஞ்சாயத்து தண்ணீர் திறந்துவிடும் வேலை பார்க்கும் குருசாமி என்பவர் வந்தார் என்றும், அவர் ஏன் பொம்பளயாளுடன் சண்டைபோடுகிறாய் என்று கேட்டார்எ ன்றும், அதற்கு பெரியசாமி பஞ்சாயத்து தெருகுழாயை உடைத்து எடுத்து குருசாமியின் தலையில் அடித்து இரத்தகாயத்தை ஏற்படுத்தினார் என்று எனது அம்மா வேலம்மாள் போனில் தகவல் சொன்னார் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரி எனது ஊர்காரர் என்பதனால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் சொல்கின்றேன் என்றால் - சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

மறுவிசாரணை : இல்லை

**திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சிசொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**/Sd/ S.K.Angalaeswari**
**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**விருதுநகர்.**